பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 04 2024 **THURSDAY** 6 30 **PM**

வணக்கம், மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் இதுவரை 13 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

2. தமிழகத்தை, பிஜேபி தலைமையிலான மத்திய அரசு புறக்கணித்து வருவதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

3. தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக தெரிவித்துள்ளது.

4. அரசியல் மாற்றத்திற்கான கூட்டணியை தமிழகத்தில் ஏற்படுத்தியிருப்பதாக பிஜேபி கூறியுள்ளது.

5. **Varazdin** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - மணிக்கா பத்ரா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

தமிழகத்தில் இதுவரை 13 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், வாக்குச்சாவடி சீட்டு வழங்கும் பணி 13ஆம் தேதிவரை தொடரும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட 141 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் பாதுகாப்புப் பணிக்கென 190 கம்பெனி மத்திய ஆயுதப்படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக சி-விஜில் கைபேசி செயலி மூலம், 2 ஆயிரத்து 337 புகார்கள் பெறப்பட்டதாகவும், இதில் 11 புகார்கள் மட்டுமே நிலுவையில் உள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் உள்ள 68 ஆயிரத்து 321 வாக்குச்சாவடிகளில், 8 ஆயிரத்து 50 பதற்றம் அளிக்கக்கூடியவை என கண்டறியப்பட்டுள்ளன.

இதில் 181 வாக்குச்சாவடிகள் மிகவும் பதற்றமளிக்கக்கூடியவை என கண்டறியப்பட்டுள்ளதாகவும், இந்த வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் 6 கோடியே 23 லட்சத்து 33 ஆயிரத்து 925 பேர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இதில் 3 கோடியே 6 லட்சத்து 5 ஆயிரத்து 793 ஆண் வாக்காளர்களும், 3 கோடியே 17 லட்சத்து, 19 ஆயிரத்து 665 பெண் வாக்காளர்களும், 8 ஆயிரத்து 467 மூன்றாம் பாலினத்தவர்களும் இடம்பெற்றுள்ளனர்.

10 லட்சத்து 92 ஆயிரத்து 420 பேர் முதல்முறையாக வாக்களிக்கவுள்ளனர்.

85 வயதுக்கும் மேற்பட்ட 6 லட்சத்து 14 ஆயிரத்து 2 வாக்காளர்களும், 4 லட்சத்து 61 ஆயிரத்து 771 மாற்றுத்திறனாளி வாக்காளர்களும் வாக்களிக்கவுள்ளனர்.

இவர்கள், தபால் மூலம் வாக்கு செலுத்துவதற்கான நடைமுறை இன்று தொடங்கியது.

இதற்கிடையே, மாநிலம் முழுவதும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ, தாம் பாடிய வாக்காளர் விழிப்புணர்வுப் பாடலை இன்று வெளியிட்டார்.

(சவுண்ட் பைட் - சாஹூ பாடல் 60 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழகத்தை, பிஜேபி தலைமையிலான மத்திய அரசு புறக்கணித்து வருவதாக திமுக துணை பொதுச்செயலாளர் திருமதி. கனிமொழி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று மதுரையில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் மத்திய அரசு தவறிவிட்டதாகவும் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், போதைப் பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று நீலகிரியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட திமுக அரசு தவறிவிட்டதாக குறிப்பிட்டார்.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் வெற்றி பெறும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

ஈரோட்டில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தமிழகத்தில் மாற்று அரசியலை கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் பிஜேபி தலைமையில் கூட்டணி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>><<<<

இனி தேர்தல் களம்,

**(MUSIC-7 sec.)**

தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது ஆரணி மக்களவைத் தொகுதி

*(வாய்ஸ் பைட் - ரவிச்சந்திரன் – 96 செகண்ட்ஸ்)*

>>>><<<<

தெற்கு ரயில்வேயின் முதன்மை மக்கள் தொடர்பு அதிகாரியாக திரு. செந்தமிழ்ச்செல்வன் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை இப்பொறுப்பை வகித்து வந்த திரு. குகநேசன், துணைப் பொதுமேலாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு கோடை வெயிலின் தாக்கம் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வட தமிழகத்தின் சில பகுதிகளில் 39 டிகிரி செல்சியஸ் முதல் 41 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பத்தூர் மாவட்டத்தில் இளம் வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திரு. தர்பகராஜ் தலைமையில் இன்று நடைபெற்றது.

**>>>><<<<**

சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் தபால் வாக்குகளை பெறுவதற்காக 40 குழுக்கள் அமைக்கப்பட்டள்ளதாக அரியலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆனிமேரி சுவர்னா கூறியுள்ளார்.

**>>>><<<<**

திண்டுக்கல் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையிலான இருசக்கர வாகன பேரணியை ஆட்சியர் திருமதி. பூங்கொடி இன்று தொடங்கி வைத்தார்.

**>>>><<<<**

தென்காசி மாவட்டத்தில் 100 வயதை கடந்து, அதிகமுறை வாக்களித்தவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி ஆட்சியர் திரு. கமல் கிஷோர் தலைமையில் இன்று நடைபெற்றது.

**>>>><<<<**

விளையாட்டுச் செய்திகள்

**Varazdin** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - மணிக்கா பத்ரா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

குரேஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை துருக்கியின் **Ibrahim Gunduz – Sibel Altinkaya** இணையை வென்றது.

>>>><<<<

ஜெர்மன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில அவர், 6-11, 7-11, 11-6, 11-3, 11-9 என்ற செட்கணக்கில் எகிப்தின் **Yassin Elshafei-** ஐ வென்றார்.

>>>><<<<

கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Anupama Upadhyaya** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 18-21, 21-14, 21-14 என்ற செட்கணக்கில் செக்குடியரசின் **Tereza Svabikova-**வை வென்றார்.

>>>><<<<

**Candidates** செஸ் போட்டி **Toronto-**வில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் பிரக்யாஞனந்தா, **Vidit Gurajathi,** குகேஷ், **Vaishli** மற்றும் **Koneru Humpy** ஆகியோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>END<<<<